நூலக ஆணைக் குழுக்களில் உள்ள மொத்தம் 3.055 ஊழியர்களில் 99 ஊழியர்கள் பணி மட்டும் இன்னும் பணி வரன்முறைப்படுத்த முடியாமல் இருக்கின்றது.

நூலக ஆணைக் குழுக்களில் புதிய பதவிகள் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள நிரந்தரம் மற்றும் தற்காலிக பணியிடங்கள் பற்றிய பணி வரன்முறைப்படுத்தப்பட உள்ளது.

இதில் தினக்கூலி அடிப்படையில் 13 நபர்களும் பகுதி நேர ஊழியர்களாக 158 நபர்களும் பணி புரிந்து வருகின்றனர். தற்போதுள்ள விதிமுறைகளின் அடிப்படையில் இவர்களை பணி வரன்முறைப்படுத்த இயலாது.

சில்லரை செலவின பட்டியலின் கீழ் பணி புரியும் 409 நபர்களைப் பொறுத்த வரையில், அவர்களைத் தகுதிக்குக் கொண்டு வருவது குறித்து பொது நூலக இயக்குநரின் கருத்துரை இந்த அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

தலைவர் அவர்களே, இங்கே மிகவும் விரிவான விவரங்கள் அளிக்கப் பட்டுள்ளன. அதில் செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில்,

முதல்நிலை நூலகர் தற்காலிகம்—1.

3 ஆம் நிலை நூலகர்—1.

உடணாளர்—1.

கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் :—

முதல் நிலை நூலகர் தற்காலிகம்—1.

உதவியாளர்—1.

இதுபோன்ற விவரங்கள் உள்ளன. தனிக் கேள்வி கேட்டால், விவரமாகப் பதிலளிக்கப்படும்.

School Assistant.

* 144 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state.—

(a) whether the Government have received any representation from the teachers of the Government Aided High Schools, requesting them to sanction one post of Assistant to the Private Schools having a strength of more than one thousand students, as in the case of Government High Schools;

(b) if so, the action taken thereon?

பள்ளி உதவியாளர்.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1978 பிப்ரவரி 27]

(அ) ஆயிரம் மாணவர்களுக்கு மேல் எண்ணிக்கை உள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளிகளில் ஒரு உதவியாளர் (Assistant) பதவி அனுமதிக்கப் படுவது போல, தனியார் பள்ளிகளிலும் அனுமதி அளிக்கப்படவேண்டும் என்று தமிழ்நாடு அரசு உதவிபெறும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களிடமிருந்து அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 10-40)

திரு. எம். சங்கரலிங்கம் : நான் கேட்ட கேள்வியில் ஆசிரியர்களிடமிருந்து அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளனவா என்று இருக்கிறது. ஆயிரம் மாணவர் களுக்கு மேல் எண்ணிக்கையுள்ள அரசினர் பள்ளியில் ஒரு உதவியாளருடன் கூட கூடுதலாக ஒருவர் இருப்பதைப்போல், தனியார் பள்ளி நிறுவனங் களிடமிருந்து முறையீடு வந்துள்ளதா என்றுதான் நான் வினு எழுப்ப எண்ணினேன். கேள்வி ஆசிரியர்களிடமிருந்து முறையீடு வந்ததா என்று தவருக இருந்ததால், அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லியிருக் கிருர்கள். இப்போது அரசுப் பள்ளிகளைப்போல தனியார் பள்ளிகளில் ஆயிரம் மாணவர்களுக்கு மேல் இருந்தால், கூடுதல் உதவியாளர் கொடுக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தற்போது சென்னை நகர அரசு உதவி பெறும் உயர்நிலைப் பள்ளியில் இருக்கும் அலுவலர்கள் சங்கத்திலிருந்து முறையீடுகள் வந்துள்ளன. பள்ளிக் கல்வி இயக்குநர் ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் உள்ள அரசுப் பள்ளிக்கு உள்ளதுபோல, கூடுதல் உதவியாளர் தனியார் பள்ளிக்குக் கொடுப்பதை ஏற்கலாம் என்று சொல்லியிருக்கிருர்கள். இப்போது அரசின் நிதிநிலைமை காரணமாக அரசு பரிந்துரைக்க இயலவில்லை. அதனுல் அந்த நடவடிக்கை கைவிடப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம் : அரசு உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள வேலைகளைப் போல்தான் தனியார் பள்ளிகளில் இருக்கும். அங்கே அரசு கேட்கின்ற பல்வேறு புள்ளிவிவரங்களைக் கொடுப்பதற்கு உதவியாளர்கள் இருக்கின்ருர்கள். ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் இருக்கும்போது, கூடுதல் உதவியாளர் தேவைப்படுகிறது. அரசுப் பள்ளிகளுக்கு அளிக்கும் அதே உதவியை தனியார் பள்ளிக்கும் கொடுக்க வேண்டும். அரசு எதிர்பார்க்கின்ற புள்ளிவிவரங்களை அவர்கள் கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டால், அரசினுடைய கொள்கைகளை

அமுல் நடத்துவது பாதிக்கப்பட்டுவிடும். ஆகையால் பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களுடைய பரிந்துரையினை ஆராய்ந்து பார்த்து, அரசு நல்ல முடிவு எடுத்து ஒரு கூடுதல் உதவியாளர் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தப் பிரச்சினையைப்பற்றி இந்த அரசு மறு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Family Benefit Scheme.

* 145. *Q.*—THIRU D. SANTOSHAM and Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the benefits of the Family Benefit Scheme are denied to teachers in Private Colleges, whereas they are applicable to teachers in Private Schools; and

(b) if so, the reasons therefor?

குடும்ப நல நிதித் திட்டம்

திரு. டி. சந்தோஷம் & திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு குடும்ப நல நிதித் திட்டத்தின் பயன்கள் அளிக்கப்படும்போது, தனியார் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அத்திட்டத்தின் பயன்கள் மறுக்கப்படுகின்றனவா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) ஆயுள் ஈட்டு கார்ப்பரேஷன் விதிகளுக்கு விலக்கு அளிக்காமல் குடும்ப நற்பயன் நிதி திட்டத்தை எல்லாத் தரப்பினருக்கும் விரிவுபடுத்தப் படுவது தவறு என்று மத்திய அரசு கருதுவதாகக் கூறப்படுகிறது. அதனால் இன்னமும் மேற்சொன்ன திட்டம் தனியார் கல்லூரி ஊழியர்களுக்கு விஸ்தரிக்கப்படவில்லை.

திரு. டி. சந்தோஷம் : தனியார் பள்ளியிலே பணியாற்றும் ஆசிரியர்களுக்கு இது அமுல்படுத்தப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் கிட்டத்தட்ட அதே நிலையில் உள்ள தனியார் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் இவர்களுக்கும் யாதொரு வித்தியாசமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இந்தத் திட்டம் அவர்களுக்கு ஏன் அமுல்படுத்தப்படவில்லை ?